785 மனையினி லோன்றுகு மாதமு மூன்றுஞ்
சுனையினி லோன்றுகுந் தொனித்தன னந்தி
வினையற வோங்கி வெளிசெய்து நின்றற்
றனையுற நின்ற தலைவனு மாமே. 16

786 ஆரு மறியா ரளக்கின்ற வன்னியை
யாரு மறியா ரளக்கின்ற வாயுவை
யாரு மறியா ரழிகின்ற வப்பொரு
ளாரு மறியா வறிவறிந் தேனே. 17

787 அறிவது வாயுவொ டைந்தறி வாய
தறிவா யதுதா னுலகுயி ரத்தின்
பிறிவு செயாவகை பேணியுண் ணுடிற்
செறிவது நின்று திகழு மதுவே. 18

788 அதுவரு ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளு
மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
யிதுவருள் செய்யு மிறையவ ளுமே. 19

789 பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாச
மழப்படி செய்வார்க் ககலு மதியே. 20

## 16. வாரசரம்

790 வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதனிட
மொள்ளிய மந்த னிரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. 1

791 வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதன்மூன்றுந்
தள்ளியிடத்தே தயங்குமே யாமாகி
லொள்ளிய காயத்துக் கூனமி லையென்று
வள்ள னமக்கு மகிழ்ந்துரைத் தானே. 2

www.aakikceyogam.com

873 சசியுதிக் குமள வுந்துயி லின்றிச்
சசியு தித்ததே தனதூ ணருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே. 23

874 ஊழி தரியா திருக்கின்ற யோகிக
ளூழிகை யாக நமனை யளப்பர்க
ளூழி முதலா யுயர்வா ருலகினிற்
றுழவல் லாரிச் சசிவன்ன ராமே. 24

875 தண்மதி பானுச்சி சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கண் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
றண்மதி வீழ்வள விற்கண மின்றே. 25

876 வளர்கின்ற வாதித்தன் றன்கலை யாறுந்
தளர்கின்ற சந்திரன் றன்கலை யாறு
மலர்ந்தெழு பன்னிரண் டங்குல மோடி
யலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. 26

877 ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து
போம்பழி யெங்கணு போகாதி யோகிக்குக்
காமுற வின்மையிற் கட்டுண்ணு மூலத்தி
லோமதி யத்துள்விட் டுரையுணர் வாலே. 27

878 வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறெடுஞ்
சூறுற நான்குந் தொடர்ந்துற வேறிற்கு
மீறிலி னன்கலை யீரைந்தொ டேமதித்
தாறுட் கலையு ளகலுவா வாமே. 28

879 உணர்விந்து சோணி யுறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையி
லுணர்வு முடம்பு முவையொக்க நிற்கி
லுணர்வு முடம்பு மொருகால் விடாவே. 29

